06.01.2023

அ.வ.எண்.46/2015

திரவியம் (P.W.1)

குறுக்கு விசாரணை :

1. புதிய சர்வே எண்.89/4-இல் தெற்கு பக்கம் எனது அப்பாவிற்கு சொத்து எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல சொத்து உண்டு. 89/4-ல் தென்மேற்கில் 51 செண்ட் 851 சதுர லிங்ஸ் உள்ளது. மேற்படி 51 செண்ட் 851 சதுர லிங்ஸ் யாருடைய பெயரில் உள்ளது என்றால் 13 செண்ட் ஜெசிந்தாமேரி பெயரில் உள்ளது. மற்ற சொத்துக்கள் 2 முதல் 4 பிரதிவாதிகள் பெயரில் உள்ளது. நான் சொல்வது தவறு என்றாலும் 3-ஆம் பிரதிவாதி பெயரில் உள்ள சொத்து 89/4-இல் வடகிழக்கணையா பகுதியில் உள்ளது என்றால் சரியல்ல. தென் மேற்கு பக்கம் உள்ளது. 3-ஆம் பிரதிவாதிக்கு தென்மேற்கு பகுதியில் தான் உள்ளது என்பதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. 89/4-இல் வடகிழக்கு பக்கம் உள்ள சொத்தை எனது அம்மா மற்றும் அவரது சகோதரர்கள் சேர்ந்து 3-ஆம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்து விட்டதால் அதில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதைபோன்று 89/4-இல் தெற்கு பக்கம் செல்லப்பனுக்கு ஒதுக்கப்பட்ட 50 செண்ட் இடத்தில் தென்கிழக்கணையா 34 1/2 செண்ட் உள்ளதாக குறிப்பிட்டு 20 செண்ட் சொத்தை 23.12.1993-இல் ரம்சியானுக்கு விலைக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. ரம்சியானுக்கு விற்க்கப்பட்ட சொத்தின் வடக்கு பக்கம் 2 1/2 செண்ட் சொத்தை செல்லப்பன் ஒதுக்கியுள்ளார் என்றால் அதை பற்றி தெரியாது.

2. நான் முதல் விசாரணையில் செல்லப்பன் ரம்சியானுக்கு 35.020-யை 89/4-இல் எழுதிக்கொடுத்ததாக கூறியுள்ளேன் அதை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் அவர்களிடம் உள்ள ஆவணத்தை என்னால் தாக்கல் செய்ய இயலாது. அதைபோன்று செல்லப்பனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் தென்மேற்கணையா புதிய சர்வே எண்.89/4 எ-இல் உட்பட்ட சொத்தை 22.05.2006-இல் அவரது மகன் ஜெயக்குமாருக்கு 4-ஆம் அயிட்ட சொத்தாக செற்றில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதைபோன்று தென்மேற்கணையா புதிய சர்வே எண்.89/4 எ-இல் உட்பட்ட சொத்தை 22.05.2006-இல் அவரது மகன் ஜெயக்குமாருக்கு 4-ஆம் அயிட்ட சொத்தாக செற்றில்மெண்ட்

எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது மேற்படி ஜெயக்குமாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்திற்கு கிழக்கு பக்கம் 4 சென்ட் சொத்தை சுனில்குமார் பெயருக்கு 5-ஆம் அயிட்ட சொத்தாக எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. ரம்சியானுக்கு எழுதிக்கொடுத்த 20 சென்றிற்கு மேற்கு பக்கம் செல்லப்பன் அவரது மகன் ராஜ்குமாருக்கு 12 சென்ட் சொத்தை 25.05.2006-இல் செற்றில்மென்ட் எழுதிக்கொடுத்தார் என்றால் அது பற்றி தெரியாது.

3. எனது முதல் விசாரணையில் செல்லப்பன் ராஜகுமாருக்கு 14 1/2 சென்ட் சொத்தை எழுதிக்கொடுத்ததாக சொல்லியுள்ளேன் அவ்வாறு எனில் அதை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் எழுதிக்கொடுக்கவில்லை விட்டு கொடுத்தார். மேற்படி சொத்தை எந்த ஆண்டு மாதம் தேதியில் விட்டுக்கொடுத்தார் என்றால் தெரியாது. ராஜ்குமார் அவரது அப்பா 25.05.2006-இல் எழுதிக்கொடுத்த சொத்தை வர்க்கீஷ்க்கு 06.02.2008-இல் எழுதிக்கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. செல்லப்பன் ஆவணப்படி அவருக்கு உரிமைப்பட்ட 51 சென்ட் அவர் அவரது மகன்களுக்கு எழுதிக்கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி செல்லப்பன் அவரது மகன்களுக்கு 51 சென்டையும் எழுதிக்கொடுத்து விட்டதால் நான் கூறுவது போன்று செல்லப்பன் ராஜ்குமாருக்கு வாக்கால் விட்டுக்கொடுக்க வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்.105/2010-இல் ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்த பிறகு தான் வா.சா.ஆ.3-ஐ நாங்கள் உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. ஆகையால் வா.சா.ஆ.3 படி எவ்வித உரிமையும் அனுபவமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

4. பிராதில் சொல்லியுள்ளபடி வா.சா.ஆ.1 மற்றும் 2 -இன் படி கிடப்பு மற்றும் கைவசப்படி 1 ஏக்கர் 10 சென்ட் என்று கூறியிருப்பது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 மற்றும் 2-இன் படி 1 ஏக்கர் 10 சென்ட் கைவசம் உள்ளது என்பதை நிரூபிக்க ஏதாவது ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் வரைபடம் தாக்கல் செய்துள்ளேன். 1 ஏக்கர் 10 சென்டை குறிப்பிட்டு வரைபடம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. புதிய சர்வே எண்.89/4 பி-இல் 58.770 சென்ட் சொத்து செல்லப்பனுக்கு ஒதுக்கப்பட்டதாக கூறியிருப்பது தவறு என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு 58.770 சென்ட் ஒதுக்கப்பட்டதை நிரூபிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. சார்பு நீதிமன்றம்

பத்மநாபபுரத்தில் அசல் வழக்கு எண்.28/1998 என செல்லப்பன் வழக்கு தாக்கல் செய்தது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி அசல் வழக்கு எண்.28/1998-இல் இந்த வழக்கு வா.சா.ஆ.1 மற்றும் 2-இன் படி வாக்கால் பாகம் செய்தததில் வடகிழக்கு பக்கம் உள்ள 50 சென்ட் குமாரசாமிக்கும், மீதமுள்ள 50 சென்டை செல்லப்பனுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளதாக மேற்படி பிராதில் குறிப்பிடப்பட்டுள்ளது பற்றி தெரியுமா என்றால் தெரியாது.

5. மேற்படி வழக்கில் செல்லப்பனுக்கு கிடைத்த 50 சென்டானது தெற்கே 30 சென்டும் மேற்கே 20 சென்டுமாக தனி தனியாக கிடந்ததாக பிராதில் கூறியுள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. இவ்வழக்கு வா.சா.ஆ.1 மற்றும் 2-ஆனது மேற்படி அசல் வழக்கு எண்.28/1998-இல் வா.சா.ஆ.12 மற்றும் 13 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. இவ்வழக்கில் என்னால் முன்னிலைப்படுத்தப்பட்ட ஒரு மாதிரி வரைபடம் யாரால் தயார் செய்தது என்றால் ஞாபகமில்லை. மேற்படி வரைபடம் இவ்வழக்கில் தாக்கல் செய்வதற்காக கள்ளதனமான தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பழைய சர்வே எண்.29/99-இல் கிழக்கணையா உள்ள சொத்து தான் புதிய சர்வே எண். 89/3, மற்றும் 4 என்று சொன்னால் எல்லா இடமும் வராது. அப்படி என்றால் எவ்வளவு இடம் வரும் என்றால் வழக்கு சொத்தில் பாதி இடம் வரும். வழக்கு சொத்தில் பாதி இடம் வருகிறது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதைபோன்று 29/99 வடக்கே 29/97 மற்றும் 98 உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி 29/97 மற்றும் 98-இல் எனது அப்பாவிற்கு 59 சென்ட் வரும் என்றால் சரியல்ல 1 ஏக்கர் 40 சென்ட் உண்டு. 1 ஏக்கர் 40 சென்ட் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பழைய சர்வே எண்.29/99-இல் கிழக்கணையா புதிய சர்வே எண்.89/3 மற்றும் 4-இல் உள்ள சொத்தை 1 ஏக்கர் 13 1/2 சென்டை மரியம்மை நாடாச்சி தங்கப்பன் பெயருக்கு 25.10.2000-த்தில் சிற்றொன்றிக்கு விலைக்கொடுத்தார் என்றால் சரிதான்.

6. மேற்படி தங்கப்பனிடம் இருந்து நானும் எனது சகோதரர்களும் சேர்ந்து 10.11.2000-த்தில் 28 .375 சென்டை சிற்றொன்றிக்கு விலைக்கு வாங்கினார் என்றால் சரிதான். நாங்கள் பெற்ற சிற்றொன்றியை ஒழிப்பிக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் உள்ள வா.சா.ஆ.1 மற்றும் 2-இன் படி உள்ள சொத்துக்கள் சிற்றொன்றி படி தங்கப்பனின் கைவசத்திலும் அனுபவத்திலும் உள்ளதால் வா.சா.ஆ.1 மற்றும் 2-

இன் படி செல்லப்பனுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று அசல் வழக்கு எண்.28/1998- வழக்கில் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது என்று சொன்னால் தெரியாது. மேற்படி சிற்றொன்றில் படி புதிய சர்வே எண்.89/3-இல் ஒரு பகுதியும் 89/4 ம் தங்கப்பனுக்கு உரிமைப்பட்டு கைவசம் அனுபவத்தில் உள்ளதால் மேற்படி தங்கப்பன் இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினர் என்றாலும் அவரை கட்சி சேர்க்காததால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.3-ஐ கிராம நிர்வாக அதிகாரியிடம் காண்பித்து சொத்துவரி செலுத்தினேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.3-இன் அடிப்படையில்தான் எனக்கு பட்டா வழங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.4 மற்றும் 5-இன் அடிப்படையில் எனக்கு வழக்கு பட்டிகை சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராகவும் மற்றும் அவர்களது தகப்பனாருக்கு எதிராகவும் பல வழக்குகள் தொடர்ந்து அவைகள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.83/2005 வழக்கானது நஷ்ட ஈட்டு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அதேபோன்று 1-ஆம் பிரதிவாதியுடன் நானும் எனது சகோதரர்களும் சேர்ந்து 2-ஆம் பிரதிவாதி மற்றும் அவரது கணவர் தங்கப்பனுக்கு எதிராக தாக்கல்செய்த அசல் வழக்கு எண்.195/2010 என்ற வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அதேபோன்று நானும் எனது சகோதரர்களும் சேர்ந்து 3 மற்றும் 4 பிரதிவாதிகள் மற்றும் அவர்களது தகப்பனார் தங்கப்பனுக்கு எதிராக தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.100/1983 வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

7. மேற்படி விபரங்கள் அனைத்தும் அசல் வழக்கு எண்.83/2015-இல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் 2 முதல் 4 பிரதிவாதிகளை கஷ்ட நஷ்ட படுத்த வேண்டும் என்பதற்காக இவ்வழக்கை அவர்களுக்கு எதிராக பொய்யான வா.சா.ஆ.3 ஐ தயார் செய்து தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் என்னுடைய பிராது மற்றும் முதல் விசாரணையில் கூறியுள்ள பொருண்மைகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு சொத்தை வா.சா.ஆ.3-இன் மூலம் எழுதிக்கொடுத்த ராஜ்குமாரை விசாரிக்கலாமா என்றால் அவரை கேட்டால் தான்

தெரியும். ஆகையால் இவ்வழக்கு 2 முதல் 4 பிரதிவாதிகளின் நீதிமன்ற செலவு மற்றும் நஷ்டஈட்டு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.